பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ கார்த்திகை மீ 27 உ வியாழக்கிழமை (13 12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 17

# ஒதுக்குப்புற முகாம்களை மூடுவதற்கு அரசு முடிவு!

## இராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிசம்பர் 13

**வடக்கு, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் எனக் கருதப்படும் — ஒதுக்குப்புறப் பகுதிகளில் (ISOLATED AREAS) நிலைகொண்டுள்ள ஆயுதப் படையினரின் முகாம்களை வாபஸ் வாங்க அரசு தீர்மானித்துள்ளது.**

**கொழும்பில் ராணுவ வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.**

இராணுவ வட்டாரங்களை ஆதாரங் காட்டி ''சண்டே டைம்ஸ்'' ஆங்கில வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்ததைத்

[4ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு அமைச்சர் திடீர் நீக்கம்

ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

புதிய பாதுகாப்பு அமைச்சராக மேஜர் ஜெனரல் சஹாதி அப்பாஸ்என்பவரை ஜனாதிபதி சதாம் ஹுசேன் நியமித்தார்.

இந்தந வடிக்கைக்குக் காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

## ஊர்காவற்றுறை மோதலில் இரு படையினர் மரணம்

யாழ்ப்பாணம், டிச.13

நேற்றுக் காலை 7 மணியளவில் ஊர்காவற்றுறை முகாமை விட்டு வெளியே வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 2 படையினர் உயிரிழந்தனர்.

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் இதனை ஒப்புக்கொண்டன.

ரி-81 ரக ரைபிள்-1, அதற்குரிய மகஸின்-4, ரி-56-2 ரக ரைபிள்-1, அதற்குரிய மகஸின்-5, தொலைத் தொடர்பு கருவி, ரவைகள்-210 ஆகியவை இந்தத் தாக்குதலின் போது தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். [உ]

## எமது படையை அனுப்பமாட்டோம்; ஆனால்

# இலங்கையில் பிறநாடுகள் தலையிட இந்தியா அனுமதிக்க மாட்டாது

### வித்யாசரண் சுக்லா அறிவிப்பு

புதுடில்லி, டிச. 13

எந்த நிலையிலும் இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பாது. அதேவேளை- பிறநாடுகளும் இலங்கையில் தலையிட இந்தியா அனுமதிக்கப்போவது இல்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்தியாசரண் சுக்லா கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

இலங்கை நிலைமை எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இது காலவரை எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை.

சம்பந்தப்பட்டவர்களை தூண்டி, சமாதானத் தீர்வைக் காணும் முயற்சிகளை இந்தியா எடுத்து வருகிறது- என்றார். (உ-எ)

## மர்மப் பொருள் வெடித்து இருவர் பலி; ஒருவர் காயம்

### மண்டைதீவில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 13

பன்னிரண்டு வயதுச் சிறுவன் எடுத்து வந்த பொருள் கீழே விழுந்து திடீரென வெடித்தபோது அந்தச் சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்தனர்; மற்றொருவர் படுகாயமுற்றார்.

மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ரவீந்திரநாத் ஜலந்தரன் [12 வயது], சிவப்பிரகாசம் சிவகுமார் [36 வயது] ஆகியோரே உயிரிழந்த இருவரும் ஆவர்.

இறந்த பொறியியலாளரான சிவப்பிரகாசம் சிவகுமாரின் சகோதரனான சிவப்பிரகாசம் சுந்தரகுமார்[20வயது] என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

மண்டைதீவில் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் விட்டுச் சென்றிருந்த மோட்டார் சைக்கிளை சகோதரர்கள் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைப் புறக் கிராம படையினர் யுத்த முனைக்கு!

எல்லைப்புற கிராமங்களைப் பாதுகாப்பதில் தற்போது ஈடுபட்டுள்ள ஆயுதப் படையினர் யுத்த முனைக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

யுத்தத்தில் தற்போது ஈடுபட்டுள்ள துருப்புக்களுக்கு உதவியாக இவர்கள் செயற்படுவர் என்றும்-

கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊர்காவல் படையினர் பொறுப்பேற்று கவனிப்பர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தற்சமயம் கிராமங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினருக்கு துணையாகவே ஊர்காவல் படையினர் இயங்கி வருகின்றனர். (உ-எ-3)

## ஜே. வி. பி. தலைவர் இந்தியாவுக்கு ஓட்டம்!

கொழும்பு, டிச. 13

ஜே. வி. பி.யின் தற்போதைய தலைவரான சோமவன்ஸ அமரசிங்க இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு மாரவிலயில் இருந்து அவரைப் படகு ஒன்றில் ஏற்றிச் சென்று இந்தியக் கரையில் இறக்கிவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படும் இரண்டு கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அதற்குச் சில வாரங்களுக்கு முன்னரே சோமவன்ஸவின் மனைவிபோலிப்பாஸ்போர்ட் ஒன்றைப் பயன்படுத்தி விமான மூலம் இந்தியா

[4ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கு, கிழக்கு மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகளே!

## அமைச்சர் தொண்டமான் பேட்டி

கொழும்பு, டிச. 13

★ வடக்கு - கிழக்கின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர்ந்த வேறு எந்த அமைப்பையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

★ அந்த மக்களுக்காகப் பேசக் கூடிய அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பங்குபற்றாத எந்த பேச்சுவார்த்தைகளினாலும் பலன் ஏற்படப் போவதில்லை.

★ வெற்றிகரமான தீர்வு ஒன்றைக் காண வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டுமே பேச்சுக்களை நடத்தி, அவர்களுடனேயே உடன்பாடு ஒன்றுக்கு வரவேண்டும்.

- அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

★ வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விமன்காமத்தில் சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம், டிச. 13

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் வீமன்காமம் பகுதியில் முட்கம்பி போடும் வேலையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சில சிப்பாய்கள் காயமுற்றனர். [உ]

### இராணுவ அதிகாரி உயிரிழப்பு

கொழும்பு, டிச 13

களுவாஞ்சிக்குடியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொலலப்பட்டார்.

மற்றும் இருவர் காயமடைந்தனர் என்று கொழும்பில் அரசு அதிகாரி ஒருவர் சொன்னார். (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 2

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு 31 வரை மட்டும்

நீடிக்கப்படமாட்டாது மீரா வெளியீடுகள் 100/-ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம், சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், ஸ்ஷமி ஸ்ரேரார்ஸ். மருதனார்மடம் (15083)

### வகுப்புக்கள்

English Steno வகுப்புக்கள் மார்கழி மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் ஸ்போக்கன் ஆங்கில வகுப்பும் ஆரம்பமாகவுள்ளது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (15096)

### தவறிவிட்டது

60, கடை வீதி வவுனியாவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும் 9 படம் எடுத்த படியுள்ள படச்சுருள் (திருமணம்) கச்சேரி எனப்படும் சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 107, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (15090)

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்," இல. 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

### சேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: அருண் மார்க்கட்டிங் அன் சேவிஸஸ் 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 5516)

### தவறிவிட்டது

68504021 V இலக்கமுடைய அடையாள அட்டையும், சிறிய பை ஒன்றும் 10-2-90 அன்று கல்வியங்காட்டு சந்தையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில், அல்லது T. சாமுவேல், அச்செழு வடக்கு, நீர்வேலி என்ற முகவரிக்கோ ஒப்படைக்குமாறு தயவாக வேண்டிக் கொள்கின்றேன். [151?1]

## ஜப்பான் அன்பளிப்பு

கொழும்பு, டிச. 13

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இலங்கையில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு தனது அன்பளிப்பாக ஜப்பான் 75 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ச. ஞானப்பிரகாசம்

[கூட்டுறவு சுக்க உதவி ஆணையாளர், ஐ. நா. சங்க முன்னாள் தலைவர்]

கூட்டுறவால் நாடுயரும்
நாடுயர்ந்தால் நலம் உயரும்
நலம் உயர நாமுயர்வோம்
அதிபதியே உமை மறவோம்.

"தம்பா" மகளிர் ஐ. நா. சங்கம்
தம்பாலை,
அச்சுவேலி.

(15099)

## ஓராண்டு நினைவஞ்சலி



### மருதர் முருகேசு

(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர், கலவாலை)

தோற்றம்:
0? - 08 - 1907

மறைவு:
25 - 11 - 1989

திதி: 13 - 12 - 1990

என்றும் எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வமே! அன்பின் சுடரொளியாக! குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை மகிழ்வோடு அரவணைத்து வளர்த்து இடையில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அட்டமியான் திருவடி சேர்ந்த எங்கள் தந்தையே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'உடையார் வளவு'
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(15091)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
28 - 03 - 1914

மறைவு:
18 - 12 - 1987

திதி:
13 - 12 - 1990



### திரு. செல்லையா இராசதுரை

ஓய்வு பெற்ற ஆசிரியர்
(சைவ மகாஜன வித்தியாசாலை - இணுவில்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

தாவடி வடக்கு, கொக்குவில். [15095]

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு :
24 - 05 - 1931

★

உதிர்வு :
13 - 11 - 1990



### திருமதி மகாதேவி மூத்ததம்பி

எங்களை நல்வழிகாட்டி வழிநடத்திய அன்புத் தாயே தங்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
டாக்டர் மூத்ததம்பி குடும்பத்தினர்

9/1 தேவிபவனம்
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்.

(15098)

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் உ. நிரோஷன்

(சஜன்)

77/58, குற்றாளம் இராமநாதன் வீதியைச் சேர்ந்த சீ. உதயகுமார் தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிரோஷன் தனது முதலாவது பிறந்தநாளை விமர்சையாக இன்று (13-12-90) கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மச்சான் முரளி, மாமாமார், அத்தைமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அன்ரிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[1509?]

# Computer Programming
# BASIC - Language

புதிய பிரிவு வகுப்புக்கள்

ஆரம்பம்: 15 - 12 - 90

அனைவரும் சேரலாம் நேரில் வரவும்

## JAFFNA CENTRAL ACADEMY

[நகைக்கடை அருகாமை]

உரும்பராய்ச் சந்தி, உரும்பராய்

[15100]

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணப் பெரும்பாகம்

1991 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி [20 - 12 - 1990] மு. ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் தெரிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம்,

சு. சே. பி. பணிமனை,
யாழ்ப்பாணம்,
10 - 12 - 1990

(அ/5520)

வலி-வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின்

## பிரச்சினைகள் பற்றி ஆராயக் கூட்டம்

காலம்: 14-12-1990ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2மணி

இடம்: யா/இராமநாதன் கல்லூரி, மருதனாமடம், சுன்னாகம்.

இடம் பெயர்ந்த மக்கள் கிராம ரீதியாக, கூட்டுறவுச் சங்க கிளை ரீதியாக பிரதிநிதிப் படுத்தக் கூடிய வகையில் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

தெல்லிப்பழை
11-12-1990

C/5532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சீர்குலைப்புக்கு துணைபோவதா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகி ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. சமரசத்துக்கான அறிகுறி எதுவும் இதுவரை இல்லை.

யுத்தம் ஆரம்பமான போது இருந்த நிலைமை இன்று தமிழீழத்தில் கிடையாது. தனது இராணுவ முகாம்கள் பலவற்றைக் கோட்டை விட்ட நிலையில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசு பொருளாதாரத்தடை உட்பட பல்வேறு நெருக்குதல்களை தமிழ் மக்கள் மீது தொடுத்து வருகிறது. அவற்றில் நிர்வாகத்தைச் சீர்குலைப்பதும் ஒன்றாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலையச் செய்து ஏற்கனவே வான் தாக்குதல்களாலும், அரச படையினரின் பயங்கரவாத நடவடிக்கைகளாலும் நிர்க்கதியாகி உள்ள தமிழ் மக்களுக்கு உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் மேலும் துன்பங்களை விளைவிக்கவே அரசு முயற்சிக்கிறது. ஆகவே இவற்றை முறியடிக்க வேண்டியது தமிழர் ஒவ்வொருவரதும் குறிப்பாக அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரதும் தலையாய கடமை ஆகும்.

இதனைகருத்திற்கொண்டே அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களைக் கடமைக்குச் செல்லுமாறும், மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கி, இன்னல் நிறைந்த இக் கட்டத்தில் அவர்களுக்கு உதவுமாறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

அலுவலகங்களில் பதுங்கு குழிகளை அமைக்குமாறும் அது ஆலோசனை கூறி உள்ளது.

கடந்த பல மாதங்களாக அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் பலர், கடமைக்குச் சமுகம் அளிப்பதில்லை என்று புகார் கூறப்படுகிறது.

சிலர் உண்மையாகவே பாதிக்கப்பட்டுள்ளனர், ஆனால் பலர் பாதுகாப்பு, போக்குவரத்துப் பிரச்சினைகளைச் சாட்டாக வைத்து தமது வீடுகளில் தங்கி விடுகின்றனர். அதே சமயம் பாதுகாப்பையோ, போக்குவரத்துப் பிரச்சினையையோ காரணமாகக் கொண்டு இவர்கள் தமது சொந்த வசதிகளைக் குறைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

வழமைபோல் சந்தைகள், கடைகளுக்குச் செல்கிறார்கள். தமது குழந்தைகளை பல மைல் தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்கிறார்கள். உற்றார் உறவினரின் நன்மை தீமைகளிலும் குறைவின்றிக் கலந்து கொள்கின்றனர். பாதுகாப்புக்காகதி அவர்கள் எந்நேரமும் பதுங்கு குழியினுள்ளேயோ, அல்லது வீட்டுக்குள்ளேயோ இருப்பதில்லை.

தற்போதைய சூழ்நிலையில் கடமைக்குச் சமுகம் அளிக்காவிட்டாலும் ஊதியம் கிடைக்குந்தானே என்ற சுயநலச் சிந்தனையே இத்தகைய போக்குக்குப் பின்னால் நிற்கிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு- கிழக்குப் பகுதிகளில் நிர்வாகத்தைச் சீர் குலைக்க அரசு திட்டமிட்டு வரும் இவ் வேளையில், இப்படியான அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள், அரசின் சீர்குலைப்புத் திட்டங்களுக்குத் துணை போவோராகவே கருதப்பட வேண்டியவர்கள்.

# 8691 வெளிமாவட்டக் குடும்பங்கள் இன்னும் யாழ்ப்பாண மாவட்டத்தில்

## ஏனையோர் இந்தியாவுக்கும் சொந்த இடங்களுக்கும்

யாழ்ப்பாணம், டிச. 13

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தவர்களில் இன்னும் இங்கு 8691 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 764 பேர் தங்கியுள்ளனர்.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவு இணைப்பதிகாரி திரு. எஸ். பத்மநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து 75 ஆயிரத்துக்குமேற்பட்டோர்கள் குடாநாட்டுக்கு வந்திருந்தனர்.

இவர்களில் பலர் இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். சிலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

மிகுதி 34 ஆயிரத்து 764 பேர் இன்னும் தங்கி உள்ளனர். (இ-3)

# சிறுவன் கிணற்றுக்குப் பலி

அச்சுவேலி, டிச.13

பட்டம் பறக்கவிட்ட சிறுவன் கிணற்றில் விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 11ஆம் திகதி அச்சுவேலி வடக்கில் இடம்பெற்றது.

செல்லத்துரை அருட்செல்வன் (வயது 12) என்பவரே இறந்தவர் ஆவார்.

[இ-11]

# உணவு முத்திரை

வலி கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 4 ஆம் இலக்க உணவு முத்திரைகளுக்கு உணவுப்பொருள்களை விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

சங்கக்கிளைகளில் 4 ஆம் இலக்க உணவு முத்திரைகளைஒப் படைக்கும்பாவனையாளர்களுக்கு அதற்கான பெறுமதிக்கு நெல் வழங்கப்படுகின்றது. (இ-11)

# விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க கலைநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 13

கடந்தமாதம் நடைபெற்ற மாவீரர் வார கலை நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் தயாரிக்கப்பட்ட 'மாற்றம்' என்னும் நாடகம் 20 இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் மாணவருக்கு கல்வி தொடர்பான கருத்தைக் காட்டும் வகையில் இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவீரர் வாரத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் - ஈழத்துப் பரணி, போராட்டம், விளித்தெழுந்துவிட்டார்கள், புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் கிழித்தெறிந்த முகத்திரை, காலை மலரும் தமிழீழம் போன்ற நாடகங்களும் பல தடவைகள், பல இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளன.

இதைவிட பட்டிமன்றங்கள், வில்லுப்பாட்டுகள், நாட்டியம் என பலவகைப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டுப் பாராட்டுப் பெற்றுள்ளன. (இ-5)

# ஒய்வூதியம்

கொடிகாமம், டிச 13

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஆகஸ்ட் செப்டம்பர் மாத ஓய்வூதியம் காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது. [இ - 75]

# வாழ்க்கைத் திறன் ஆசிரியருக்கான பயிற்சி

1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள வாழ்க்கைத் திறன் கல்விப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் 4.00 மணிவரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடைபெறும்.

ஏற்கனவே கடந்த ஜூன் 17ஆம் 18ஆம் 19ம் திகதிகளில் இப்பயிற்சியில் பங்குபற்றி அசாதாரண சூழ்நிலையில் இடைநிறுத்திக்கொண்டோர் நாளை 14ஆம் திகதி தொடங்கும் பயிற்சியில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

# 25 பாடசாலைகளில் முஸ்லிம் அகதிகள் தஞ்சம்

மாங்குளம், டிச.13

புத்தளம் பகுதியில் 25 பாடசாலைகளில் முஸ்லிம்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் வேப்பமடு பகுதியிலும் கூடாரங்கள் அமைத்து பலர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் இவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளை அளித்து வருகிறது.

(இ-94)

# எர்ஷாத் வீட்டுக்காவலில்

டாக்கா, டிச.13

பங்களாதேஷின் ஜனாதிபதியாக எட்டு ஆண்டுகளாக பதவிவகித்து, கடந்தவாரம் ராஜினாமாச் செய்த ஜெனரல் எர்ஷாத் நேற்று பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

அவர் மீது எதிர்க்கட்சிகள் மற்றும் மாணவர் அமைப்புகள் சுமத்தியுள்ள ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஜனநாயக உரிமைகளை பலாத்காரமாக அடக்கியது ஆகிய குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்த விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க பங்களாதேஷ் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது,

# நிவாரணப் பொருள்கள் கிளைக்குக் கிளை வேறுபாடு

அச்சுவேலி. டிச 13

யாழ். மாவட்டத்தில் நிவாரண உணவுப் பொருள் விநியோகம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது.

சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் கறிச்சரக்கு சாமான்கள் உட்பட பத்துக்கு மேற்பட்ட பொருள்கள் வழங்கப்படுகின்றன.

சிலகிளைகளில் அரிசி, மா சீனி. பருப்பு, லக்ஸ்பிறே உழுந்து ஆகியவை மட்டுமே வழங்கப்படுகின்றன.

இந்த வேறுபாடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டத்தில் அல்ல, கிளைகள் மட்டத்திலும் மாறுபட்டுக் காணப்படுவதாக கூறப்படுகிறது. (இ-11)

# கணிதபாட வினாத்தாள் குறித்து மாணவர்கள் புகார்

கொழும்பு, டிச. 13

தற்போது நடைபெற்று வரும் ஜீ. சி. ஈ சாதாரண தரப் பத்திரப் பரீட்சையின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கணிதப் பாடத்துக்கான வினாத்தாள் விடை எழுதமுடியாதபடி தயாரிக்கப்பட்டிருந்தது.

இப்படியான பரீட்சைத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதனைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் இது குறித்துவிசாரணை நடத்தப்படும் என்றும் -

முறைப்பாடு சரியானதாகக் காணப்பட்டால், கணிதப் பாடம் பரீட்சை எடுக்க பரீட்சாத்திகளுக்கு அநீதி இடம்பெறாத வண்ணம் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

# ப. நோ. கூ. ச. ஊழியர்கள் 14 பேருக்கு தங்கப்பதக்கம்

காங்கேசன்துறை, டிச.13

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருடகாலம் சிறப்பாகப் பணிபுரிந்த 14 பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட சங்கத்தின் பணிகளுக்கு சிறப்பான முறையில்பங்கு கொண்டு உழைத்த 56 ஊழியர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட ஊழியர்கள் விவரம் வருமாறு;

திரு. செ. பத்திநாதர், திரு. அ. செல்வரத்தினம், திரு. ந. பாலகணேசன், திரு. சோ. மகாராசா, திரு. மா. வே. இராசா, திரு. வே. பொன்னுத்துரை, திரு. மா. பாலசுப்பிரமணியம், திரு. க. நடராசா, திரு. பொ. செல்வராஜா, திரு. வ. குமாரசாமி, திரு. வ, இராமலிங்கம், திரு. சி. சண்முகசுந்தரம், திரு. த. இராசரத்தினம், திரு. தி. சிவபாலரத்தினம். [இ-68]

# அரசை எதிர்பார்த்தால் ஏமாற்றமே கிடைக்கும்

## சிரமதான வைபவத்தில் உரை

எதற்கும் நாம் அரசாங்கத்தை எதிர்பார்க்கக் கூடாது. எதிர் பார்த்தால் எமக்கு ஏமாற்றமே கிடைக்கும்.

வரணிப்பகுதி சிற்றூரவைத் தலைவரும் உப நீதிமன்றத் தலைவருமான திரு. எஸ். கணேசமூர்த்தி குடமியன் வீதி சிரமதான வைபவத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்,

மேலும் அவர் பேசுகையில் தானத்தில் சிறந்தது சிரமதானம் இதுபோன்ற பல பணிகள் எமது கிராமத்தில் இருக்கின்றன. இளைஞர்கள் இதில் ஆர்வம் கொண்டு ஈடுபட்டால் நாம் எமது பகுதியில் சாதிக்கவேண்டிய பல விடயங்களை செலவில்லாமல் இலகுவில் நிறைவேற்ற முடியும் என்றார்.

மாவீரர் தின இறுதி நாளில் இச் சிரமதானம் இடம்பெற்றது. [இ]

# இளைப்பாற முடிவு

சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் ஊழியர்களில் 16 சதவீதமானோர் இளைப்பாற்று சலுகையைப் பயன்படுத்தி இளைப்பாற முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-117]

# தனித் தமிழகம் உருவாக்க தி. மு. கவினர் முயற்சி!

## பாரதீய ஜனதாபிரமுகர் குற்றச்சாட்டு

தனித தமிழகம் ஒன்றை உருவாக்க தி. மு. கவின் ஒரு பகுதியினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்புகொண்டு உள்ளனர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் ஜனாகிருஷ்ணமூர்த்தி மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

'விடுதலைப் புலிகளுக்கு தமிழகம் போர்த்தளமாகி விட்டது' மருத்துவ சைக்கு என்ற போர்வையில் தினமும் தமிழகத்துக்குள் போராளிகள் ஊடுருவிக் கொண்டிருக்கிறார்கள்.

'இது விஷயத்தில் தமிழக பொலீஸார் செயலற்றுப் போயுள்ளனர். ஆகவே மத்திய புலனாய்வுப் பகுதி இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்' — என்றும் திரு. ஜனாகிருஷ்ணமூர்த்தி செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# வலி வடக்கு ஓய்வூதியர் கூட்டம்

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஓய்வூதியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.

கடந்த ஜூன் மாதத்தில் பின் ஒழுங்காக ஓய்வூதியம் பெறமுடியாத நிலையில் இருப்பது குறித்து கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்தோட்டம் ஊடாக செல்ல அனுமதி!

வடக்கில் இருந்து செல்பவர்கள் வவுனியா, பூந்தோட்டம் பகுதியைக் கடந்து செல்ல கடந்த திங்கட்கிழமை முதல் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதற்கு முன்னர் சிலதினங்கள் இப் பகுதியூடாக வடக்கு நோக்கி வர அனுமதிக்கப்பட்டது. ஆனால் தெற்கே செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. [ஒ-3]

## வலந்தலையில் ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், டிச. 13

காரைநகர், வலந்தலை குடியிருப்பு பகுதிகள் மீது நேற்று முற்பகல் 10 மணியளவில் ஹெலி ஒன்று சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

புதிய வீட்டுத் திட்டப் பகுதி, வலந்தலைச் சந்தி, ஆஸ்பத்திரி சுற்று வட்டாரப் பகுதிகளிலேயே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-15)

## வீர மரணம்

யாழ்ப்பாணம், டிச. 13

கடந்த செவ்வாயன்று நள்ளிரவு இடம் பெற்ற எதிர்பாராத வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ஹரிகரன் [கார்த்திகேசு புலேந்திரன் - சாவகச்சேரி] வீரமரணமடைந்தார். [உ]

## ஷெல் தாக்குதல்

பலாலி முகாமில் இருந்து நேற்று கட்டுவன், தெல்லிப்பழைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஷெல் தாக்குதலின் போது அண்ணாமலை (வயது 56)-தெல்லிப்பழை கிழக்கு, சிவசுப்பிரமணியம் (58 வயது -கட்டுவன் மேற்கு ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-68)

## காவல் அரண் மீது அருள் 89 தாக்கு

கடந்த திங்களன்று காலை 7-30 மணியளவில் ஆரையம்பதி 4ஆம் கட்டையில் உள்ள இராணுவ காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் அருள்-89 தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

அதேவேளை தாளங்குடாவில் இருந்து ஆரையம்பதிக்கு வானில் வந்துகொண்டிருந்த இராணுவத்தினர்மீதும் இடைவழியில் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

## 6,000 அகதிகள் வெளியேற்றம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி முகாமில் இருந்த 6 ஆயிரம் தமிழ் அகதிகள் விசேட அதிரடிப் படையினரால் வெளியேற்றப்பட்டதாக தெரியவந்தது. [உ-3]

## )செய்திச் சரம்(

### 8 படையினர் பலி?

கொழும்பு, டிச. 13

முல்லைத்தீவு, வாழைச்சேனைப் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 8 படையினர் பலியானதாக இலங்கை அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்திய தொலைக்காட்சி தெரிவித்தது. [உ-3]

### கருத்தரங்கு நாளை

வலிகாமம் பிரதேச விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற இருக்கிறது. [ஒ]

### மர்மப்பொருள்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் திருத்திக்கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களது ஒன்றுவிட்ட சகோதரனான சிறுவன் [ஜலந்தரன்] ஏதோ ஒரு பொருளைக் எடுத்து வந்தான்.

அந்தப்பொருளை வாங்கிய போது அது தவறி விழுந்து, பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

### ஒதுக்குப்புற..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து அரசு இந்த முடிவை அமுல் நடத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மாங்குளம் இராணுவமுகாமை இழந்ததுடன், பெரும் எண்ணிக்கையில் படையினரையும் மாங்குளம் தாக்குதலின்போது இழந்தது என்று ''சண்டேடைம்ஸ்'' செய்திமேலும் தெரிவித்தது.

அருகில் உள்ள இராணுவ நிலையில் இருந்து எவ்வளவோ மைல் தூரத்தில் - ஒதுக்குப்புறத்தில்-மாங்குளம் இராணுவ முகாம் இருந்தது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் ஆனையிறவு இராணுவ முகாமும் மிகவும் ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ-3]

### வடக்கு, கிழக்கு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றே வழி என உறுதியாக அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் நம்பும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

★ பேச்சுவார்த்தை என்ற போர்வையில் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை மூடிமறைக்க சிலர் முயற்சிக்கின்றனர். ஆகவே, பேச்சுக்களில் நம்பிக்கை வைப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது,

★ அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் மட்டுமே கட்டாயமாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ-எ-3]

### ஜே. வி. பி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிட்டார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை —

சோமவன்ஸவின் நெருங்கிய சகாவான இராணுவ அதிகாரி ஒருவர் விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் —

சோமவன்ஸ சோதனை நிலையங்களைத் தாண்டிச் செல்வதற்கு இந்த இராணுவ அதிகாரியே உதவி புரிந்ததாகவும் தெரிகிறது. [ஒ-எ-3]

## இரு இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச 13

இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை இரு இளைஞர்களின் சடலங்களை வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துவிட்டு, அவற்றைப் பின்னர் எடுத்துச் சென்றனர் என்று தெரியவருகிறது.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் எனக் கருதப்படும்இவர்கள், பூந்தோட்டம் பகுதியில் கைதுசெய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. [ஒ-3]

## ராணுவம் வன்முறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மம்மியடிமுனைப் பகுதியில் கடந்த திங்களன்று இராணுவத்தினர் இரு தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சிப்பாய் கால் இழப்பு

கடந்த திங்களன்று ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்து மண்முனை நோக்கிப் படையினர் ரோந்து சென்றபோது விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி சிப்பாய் ஒருவர் காலை இழந்தார்.


## தேவை

பெற்றோலில் இயங்கக்கூடிய லொறி எஞ்சின் தேவை. இயந்திரத்திற்கு தகுந்த பெறுமதி வழங்கப்படும், நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. எதிர்பார்க்கும் விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

இல. 160, C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

[15110]

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L பிரிவு 4 DAY CLASSES**
(8 30 — 1.30)

புதிய பிரிவு ஆரம்பம்: 14 - 12 - 90

**பிரிவு 2 SAT, SUN CLASSES**
(8. 00 — 2. 00)

புதிய பிரிவு ஆரம்பம்; 15 - 12 - 90

**பிரிவு 4 EVENING CLASSES**

புதிய பிரிவு ஆரம்பம்: 14 - 12 - 90

ஆண்டு 10, 9, 8, 7, 6 புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

மு: குறிப்பு: i கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்;
ii விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும். (சி-5526)


## மரண அறிவித்தல்கள்

### திரு. அன்னலிங்கம் சந்திரமோகன்

திரு. அன்னலிங்கம் சந்திரமோகன் 9 - 12 - 90 ஞாயிறு அன்று காலமானார். இவர் அன்னலிங்கம், லீலாராணியின் அன்பு மகனும் சரஸ்வதி, சந்திரமதி, சந்திரதாசன் [ஜேர்மனி], நந்தகுமார் [சுவிஸ்], நந்தவதனி, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானபண்டிதன், விமலநாதன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயப்பிரதா, லவப்பிரதா, ராஜேஸ்கண்ணா, நிருஜிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 - 12 - 90 அன்று நடைபெற்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

தகவல்:
அன்னலிங்கம்
[தகப்பன்]

பலாலி றோட்,
கோண்டாவில் கிழக்கு. (15103)

### செல்லத்துரை அன்ரன்

செல்லத்துரை அன்ரன் 12-12-90 இல் காலமானார். அன்னார் திருமதி திரேசம்மா செல்லத்துரையின் அன்பு மகனும், பற்றிக், லற்றிசியா, வவா, மாப்பிள்ளை, மார்சலின், பேபி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அல்பிரட், வாம்சலின், அமிர்தநாயகம், பத்மா, பட்டு, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று 13-12-90 வியாழக்கிழமை பி.ப 4 00 மணியளவில் இல: 25 பாக் றோட்டில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
செல்லத்துரை
குடும்பத்தினர்

25, பாக் றோட்,
குருநகர்,
யாழ்ப்பாணம். [14694]

### சிவப்பிரகாசம் சிவகுமார்

சிவப்பிரகாசம் சிவகுமார் (இயந்திரப் பொறியியலாளர் - காங்கேசன் சிமெந்து ஆலை) நேற்று அகால மரணமானார்.

இவர் சிவப்பிரகாசம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி சிவப்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும், தயாநிதி (ஆசிரியை, வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்), உதயகுமார் (புள்ளி விவர ஆய்வாளர் - கச்சேரி, திருமலை), அருட்குமார், சுந்தரகுமார் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல், இன்று மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சிவப்பிரகாசம்.

5 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. [14696]

## OBITUARY

### Mrs. E. P. Arulanantham (Pushpam)

Mrs. E P. Arulanantham (Pushpam), wife of the late Rev. J. T. Arulanantham (Former Principal, St. John's College, Jaffna), mother of Kirupa (Australia), Pararasan (U. K.), Vijayan (U.S.A), Karuniyan (U.S A). passed away on 15 - 11 - 90 at the residence of her eldest son Dr Pararasan Arulanantham, No. 3, St. John's Church Road, Folkestone, Kent CT 19 5BQ, U.K.

K. POORANAMPILLAI.

46, Somasundaram Avenue,
Chundikuli. (15104)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org